## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6

### மார்ச் 2020 மற்றும் ஜுன் 2020 பருவங்களில் இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளை பழைய பாடத்திட்டத்திலும் நடத்துதல் குறித்த செய்திக்குறிப்பு

2018–19–ம் கல்வியாண்டு முதல் பதினோராம் வகுப்புக்கும் (+1) 2019–2020–ம் கல்வியாண்டு முதல் பத்தாம் வகுப்பு (10) மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கும் (+2) புதிய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மார்ச் 2020 பருவம் முதல் நடத்தப்படும் இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் புதிய பாடத்திட்டத்தின்படி மட்டுமே நடத்தப்படும். மார்ச் 2020 பருவம் முதல் பழைய பாடத்திட்டத்தில் இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் நடத்தப்படாது என 20.06.2019 நாளிட்ட இவ்வலுவலக செய்திக்குறிப்பு வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்களுக்கு பழைய பாடத்திட்டத்திலேயே மீண்டும் தேர்வெழுத வாய்ப்பு வழங்குமாறு கோரி இவ்வலுவலகத்தில் தொடர்ச்சியாக கோரிக்கைகள் பெறப்பட்டதைத் தொடர்ந்து, மாணவர்களின் நலன் கருதி, ஏற்கனவே பழைய பாடத்திட்டத்தில் இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்களுக்காக, மார்ச் 2020 மற்றும் ஜுன் 2020 பருவங்களில் பழைய பாடத்திட்டத்திலேயே தேர்வுகள் நடத்த அனுமதித்து தற்போது அரசாணை (அரசாணை (ப) எண். 379, பள்ளிக்கல்வித் (அ.தே,) துறை, நாள்.25.09.2019) பெறப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கனவே இடைநிலை/மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளை பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள் அனைவருக்கும் **மார்ச் 2020 மற்றும் ஜுன் 2020 ஆகிய இரு பருவங்களில் பழைய பாடத்திட்டத்தில் (+2 600 மதிப்பெண்கள்) பொதுத்தேர்வுகள் நடத்தப்படும். அதன் பின்னர், மார்ச் 2021 பருவம் முதல் மேற்குறிப்பிட்ட தேர்வர்கள் தேர்ச்சி பெறாத / வருகை புரியாத பாடங்களை மட்டும் நடைமுறையில் உள்ள பகுதி முறையில் தேர்வெழுதும் திட்டத்தின்படி, புதிய பாடத்திட்டத்தின் கீழ் தேர்வெழுத வேண்டும்** என அறிவிக்கப்படுகிறது.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம் :** சென்னை – 600 006
**நாள் :** 30 .09.2019